# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

மனு எண்: 0252/2017/ந

ஆணை எண்: 0023/2017

நாள்: 27/02/2017

திரு. K. மணி,
த/பெ. N. கிருஷ்ண செட்டியார்,
31/10, பூந்தோட்ட வீதி,
பேர்ணாம்பட்டு. - மனுதாரர்

தனிப்பட்ட நபர்கள் (2)
கிராம நிர்வாக அலுவலர்கள் (7)
பதிவாளர்கள் (2) - எதிர் மனுதாரர்கள்

தங்களது 21.02.2017 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி மனு பரிசீலிக்கப்பட்டது. தங்களது மனுவில் குறிப்பிட்டுள்ள எதிர்மனுதாரர்கள் மற்றும் புகார்கள் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்ட வரம்பிற்குட்பட்டதல்ல. உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் மீதான முறைகேடு/ உள்ளாட்சி நிதியிழப்பு தொடர்பான புகார்கள்/ முறையீடுகள் மட்டுமே இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட வேண்டும். தங்களது முறையீட்டில் அவ்வாறான குறிப்பான கோரிக்கைகள் ஏதுமில்லை. மேலும், ஏற்கெனவே தங்களிடமிருந்து வரப்பெற்ற 31.05.2016 நாளிட்ட இதே போன்ற பிறிதொரு மனுவின் மீதே மேற்படி விவரங்கள் தெரிவிக்கப்பட்டு இம்முறைமன்றத்தால் உரிய ஆணை (ஆணை எண்.110/2016 நாள்:16/06/2016) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, தங்களது முறையீடு குறித்து இம்முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய பொருள் ஏதுமில்லை என மீள தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுவதுடன் தங்களது அசல் மனு மற்றும் அத்துடன் வரப்பெற்ற இணைப்புகளுடன் திருப்பியனுப்பப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

இணைப்பு: அசல் மனு இணைப்புகளுடன்

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

<u>பெறுநர்</u>
திரு. K. மணி,
S/o. N. கிருஷ்ண செட்டியார்,
31/10, பூந்தோட்ட வீதி, பேர்ணாம்பட்டு,
வேலூர் மாவட்டம்.